தேதி.28.07.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.321/2023 திருமதி.தமிழ்ச்செல்வி, க/பெ.சரவணக்குமார் பி.சா.1

<u>பி.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வாதி லிங்கராஜ், நான் குடியிருந்த வீட்டின் உரிமையாளர் தேவியின் அண்ணன் என்றால் சரிதான். நான் அல்லது எனது கணவரா தேவியுடன் மணல், ஜல்லி கூட்டுவியாபாரம் செய்தோம் என்றால் எனது கணவர் தேவியுடன் கூட்டு வியாபாரம் செய்தார். மேற்படி கூட்டு வியாபாரம் எப்போது தொடங்கப்பட்டு எப்போது முடிந்தது என்றால் எனது கணவரிடம் தான் அக்ரிமெண்ட் இருந்ததா என்று அவருக்கு தான் தெரியும். தேவியுடன் சேர்ந்து எத்தனை வருடங்கள் எனது கணவர் வியாபாரம் செய்தார் என்றால் ஒரு வருடம் செய்தார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவரும் தேவியும் கூட்டு வியாபாரம் செய்தோம் என்று சொல்லியுள்ள நிலையில் எத்தனை வருடங்கள் கூட்டு வியாபாரம் செய்தார்கள் என்றால் ஆறு மாதம் செய்தோம். அதன் பின்னர் எங்களுக்குள் மனகசப்பு ஏற்பட்டது. எனது பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து 3ம் நபரிடம் கடன் வாங்கிக்கொள்ளலாம் என்று தேவியிடம் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்படைத்தோம் என்று சொல்லியுள்ள நிலையில் மேற்படி செட்டிட்மெண்ட் ஆவணமானது என்ன வகையான ஆவணம் என்றும், யார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றும், மேற்படி ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2016ம் ஆண்டு என்னுடைய சின்ன மாமனார் நஞ்சன் என்பவரிடமிருந்து எனது பெயருக்கு விலைக்கு வாங்கப்பட்டது.

மேற்படி சொத்தை தவிர வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டின் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. வாதியின் சகோதரி தேவியிடம் தான் உள்ளது. 2019லிருந்து தற்போது வரை என்னுடைய ஆவணம் வாதியினி சகோதரி தேவியிடம் உள்ளது என்று மேற்படி ஆவணத்தை திருப்பி தருமாறு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை திருப்பி தருமாறு தேவியின் பெயரில் காவல் நிலையத்தில் புகாரோ அல்லது பஞ்சாயத்தோ ஏதேனும் பேசப்பட்டதா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது தான் என்று வாதி சொல்கிறார் என்றால் என்னுடையது இல்லை. மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்தை தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். தற்போது வரை தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்ப எந்தவொரு மனுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள கைரேகை, கையெழுத்து என்னுடையது தான் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாடகை வீட்டில் இருந்தபோது தொழில் செய்ய கடன் வாங்கித்தருமாறு கேட்டதின்பேரில் வாதியின் சகோதரி தேவி சொன்னதின் பேரில் வாதியிடம் கடன் வாங்கி தொழில் செய்தோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 ஆவணத்தின்படி நான் சொல்லியுள்ளது போல் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும், அனுமதிக்கப்பட்ட திருமணங்கள், போக்குவரத்து ஆகியவைகள் G.O.(MS)No.466ன் படி 17.07.2021ம் தேதியின்று தமிழ்நாடு அரசால் Disaster Management Act 2005ன்படி

நடத்திக்கொள்ளவும், சென்று வரவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும் 20.07.2021ம் தேதியன்று ஊரடங்கு உத்தரவு இருந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுப்பதிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனாக பெற்றுக்கொண்டு அசலையும், வட்டியையும் திருப்பி தராமல் இருந்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் நான் வாதியிடம் வாங்கிய பணத்தை சட்டப்படி திருப்பி தர கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எவ்வாறு கையெழுத்து செய்வேன் என்றால் தமிழில் தான் கையெழுத்து செய்வேன். தற்போது என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வக்காலத்து ஆவணத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து எங்கு உள்ளது என்றும் எவ்வாறு கையெழுத்து செய்துள்ளேன் என்றால் என்னுடையது தான். தமிழில் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு எதிருரையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையது தான். ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேன். நான் கடன் வாங்கிய காலத்தில் கொரோனா ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. தாவாப்படி நான் வாங்கிய கடனையும், அதன் வட்டியையும் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.